
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1028**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

**குமரன்தாஸ்**

**38**

படங்கள் உதவி : ஞானம்



**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# தமிழ்நாட்டுக்கு கலைஞர் சூட்டிய மணிமகுடம்!

*பண்டைய மன்னராட்சிக்கால, சாதிய வர்க்கத் தமிழ்ச் சமூகத்தில் மன்னர்களுக்கும் மேலாக மத குருமார்கள் வீற்றிருந்து ஆட்சி செய்து வந்ததை, கலை இலக்கியத்தின் வாயிலாக மிகச்சிறப்பாக மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியவர் கலைஞர். இதற்கு மிகச்சிறப்பான உதாரணமாக, 'மந்திரிகுமாரி' திரைப்படத்தைக் கூறலாம். அதேபோன்ற மற்றொரு திரைப்படம்தான் கலைஞரின் 'மணிமகுடம்'.*

*சாதிய வர்க்க சமூகத்தில் வர்ணமும் வர்க்கமும் முரண்படும் இடம் இது! வர்க்க அடிப்படையில் அரசனே உயர்ந்தவன். அதனால் அரசதிகாரத்தின் உச்சத்தில் இருக்கிறான். ஆனால், வர்ண அடிப்படையில் பிராமணர்கள் சமூக அடுக்கின் உச்சத்தில் இருக்கின்றனர். அரசன் பிராமணனாக இருந்துவிட்டால் முரண் இல்லை.*

*ஆனால், தமிழ்நாட்டில் சத்திரிய, வைசிய வர்ணங்கள் இல்லாத நிலையில் பிராமணர் (பார்ப்பனர்) X சூத்திரர் (பார்ப்பனரல்லாதார்) என்ற இருவர்ணங்கள் மட்டுமே இருந்து வந்த நிலையில், அரசன் சூத்திரனாக இருப்பதால், பிராமண மத குரு அரசனை விட மேலானவனாக, பிறப்பால் உயர்ந்தவனாக இருந்து அரசனுக்கும் ஆணையிட்டுக் கட்டுப்படுத்துபவனாக, பூவுலகின் ஆண்டவனாக இருக்கிறான். இந்த முரண்பாடுதான் தமிழ்நாட்டின் தனித்துவமாகும். இதனைத்தான் திராவிட இயக்க சினிமாக்கள் மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டின.*

*அந்தவகையில்தான் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய பல சரித்திரப் படங்களில் பார்ப்பன மதகுருமார்கள் ஆட்டி வைக்கும்படியெல்லாம் ஆடும் தலையாட்டிப் பொம்மைகளாக அரசர்கள் படைக்கப்பட்டிருந்ததையும் மத குருமார்களின் ஆதிக்கத்தையும் சூழ்ச்சியையும் படைத்தளபதியோ இளவரசனோ எதிர்த்துப் போராடி மக்களைக் காப்பாற்றுவதையும் கலைஞரின் பல திரைப்படங்களில் பார்த்திருக்கிறோம்.*

*ஆனால், இத்திரைப்படத்தில் மத குருவின் சூழ்ச்சியை அரசனே உணர்ந்து முறியடித்து மக்களைக் காப்பதுடன் இறுதியில் மன்னராட்சி முறையையே ஒழித்து, மக்களாட்சியை நிலைநாட்டுவதாக திரைக்கதையைக் கலைஞர் எழுதியுள்ளார்.*



*1966-இல் வெளிவந்த இந்தத் திரைப்படத்தில் எஸ்.எஸ்.ஆர் (மணிமாறபூபதி) ஆர்.விஜயகுமாரி (அல்லி), ஜெயலலிதா (பூங்கொடி, கலாராணி), சகஸ்ரநாமம் (புதுமைக் கவிஞர்), ஓ.ஏ.கே. தேவர் (மக்கள் மன்றத் தலைவர் பொன்னழகன்), எம்.என்.நம்பியார் (மத குரு, வேங்கை நாட்டு ஒற்றன்), மனோரமா (வஞ்சி), நாகேஷ் (விகடகவி ஆனந்தன்), ஏ.கருணாநிதி (படை வீரன் நல்லான்), உடையப்பா (பல தேவன்), எஸ்.ஏ.நடராஜன் (திவான் குணசீலன்) ஆகியோர் நடித்துள்ளனர். திரைக்கதை வசனம் கலைஞர். இயக்கம் எஸ்.எஸ்.ஆர். தயாரிப்பு டி.வி.நாராயணசாமி.*

### திரைப்படத்தின் கதை

*மணிபுரி நாட்டின் அரசனாக மணிமாற பூபதி (எஸ்.எஸ்.இராஜேந்திரன்) இருக்கிறான். ஆனால், அவ்வரசனை விடவும் அதிகாரம் படைத்தவராக மத குருவும் (எம். என். நம்பியார்) சீமான்கள் சபையும் இருக்கிறது. மத குருவும் திவான் குணசீலனும் (எஸ்.ஏ.நடராஜன்) சேர்ந்து சீமான்கள் சபையைக் கைக்குள் போட்டுக்கொண்டு மக்களைக் கொடுமைப்படுத்துகின்றனர். தங்களை எதிர்ப்பவர்களைக் கொலை செய்கின்றனர். அப்படித்தான் வளவன், வானவன், கதிரவன், வீரமணி, வெற்றிவேலன் ஆகிய அய்வரையும் திவான், மக்கள் மத்தியில் வைத்துத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்கின்றான்.*

*அதனைத் தடுக்க முற்படும் வீரமணியின் தந்தையின் காலை ஒடித்துச் சிறையில் அடைக்கிறான். இதனைக் கண்டு வீரமணியின் தங்கை பூங்கொடி (ஜெயலலிதா) இக்கொடுமைகளுக்குக் காரணமான மன்னன் மணிமாறனைக் கொலை செய்வேன் எனச் சபதம் எடுக்கிறாள். கலாராணி என்று தனது பெயரை மாற்றிக் கொண்டு வேட்டைக்கு வரும் அரசனைச் சந்தித்துக் காதல் நாடகம் ஆடுகிறாள். மன்னன் அவளை வன மாளிகையில் தங்கவைக்கிறான்.*

*வீரமணியின் மற்றொரு தங்கை அல்லி (ஆர்.விஜயகுமாரி) மக்கள் மன்றத்தலைவன் பொன்னழகனுடன் (ஓ.ஏ.கே.தேவர்) சேர்ந்து அரசனுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடுகிறாள்.*

*மன்னன் மணிமாறன் புதுமைப்பித்தனாக மாறுவேடமிட்டு, மக்கள் மன்றத்தாருடன் இணைந்தும் செயல்படுகிறான். மதகுரு கொடிக்கால் நகரத்தை அழித்து, அங்குள்ள ஐந்தாயிரம் குடும்பங்களை அடித்து விரட்டி விட்டு, அங்கு ஆலயம் கட்ட ஏற்பாடு செய்கிறான். கொடிக்கால் நகர மக்கள் எதிர்த்துப் போராடுகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக மணிமாற பூபதியும் குரல் கொடுக்கிறான். அவனது புரட்சிகரமான பேச்சைக் கேட்டு அல்லி அவனை விரும்புகிறாள். ஆனால், மணிமாறனோ பூங்கொடியை விரும்புகிறான்.*



**மத குருவின் சூழ்ச்சியை அரசனே உணர்ந்து முறியடித்து மக்களைக் காப்பதுடன் இறுதியில் மன்னராட்சி முறையையே ஒழித்து, மக்களாட்சியை நிலைநாட்டுவதாக திரைக்கதையைக் கலைஞர் எழுதியுள்ளார்.**

*திவானும் மதகுருவும் ஆலயம் கட்டும் அனுமதி ஆணையில், கையொப்பம் இடுமாறு அரசனை வற்புறுத்துகின்றனர். மணிமாறன் மறுத்துவிட்டு அரண்மனையை விட்டு வெளியேறி காணாமல்போய் விடுகிறான். திவான், சீமான் சபையின் ஒப்புதலைப் பெற்று கொடிக்கால் நகர மக்களை நகரத்தை விட்டு வெளியேற்ற முற்படுகிறான்.*

*கலாராணி என்ற பெயரில், அரசன் மணிமாறனைப் பழிவாங்க வந்த பூங்கொடி மனம் மாறி, மணிமாறனைக் காதலிக்கிறாள். மன்னனும் அவளைக் காதலிக்கிறான். இருவரும் திருமணம் செய்துகொள்ள இருப்பதறிந்து மன்னனைப் பழிவாங்குவதற்காக மக்கள் மன்றத் தலைவன் பொன்னழகன் கலாராணியைக் கடத்தி வரும் பணியை புதுமைப்பித்தன் வேடத்தில் இருக்கும் அரசனிடமே ஒப்படைக்கிறான்.*

*புதுமைப்பித்தனும் மயக்க மருந்து கொடுத்து, பூங்கொடியைக் கடத்தி வந்து மக்கள் மன்றத்தில் ஒப்படைத்து விட்டு, தனக்குப் பலாத்கார வழியில் நம்பிக்கை இல்லை. எனவே, மக்கள் மன்றத்தை விட்டுப்போகிறேன் என்று கூறி விலகிப்போய் 'மணிமகுடம்' என்ற பத்திரிகையைத் தொடங்கி அதில், கொடிக்கால் நகரத்தில் ஆலயம் கட்ட நினைக்கும் மத குருவின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தி எழுதிப் பிரச்சாரம் செய்கிறான். அதற்காக, கைது செய்யப்பட்டு, மதகுருவின் முன் கொண்டு வந்து நிறுத்தப்படுகிறான். அவனுக்கும் அரசனுக்கும் இருக்கும் உருவ ஒற்றுமையைப் பயன்படுத்தி அவனை அரசனாக ஆக்கித் தங்களது விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள மத குருவும் திவானும் திட்டமிடுகின்றனர். ஆனால், பைத்தியக்காரன் வேடமிட்டு வந்த மணிமாறன், மத குரு, திவான் மதகுருவின் கையாள் பலதேவன் ஆகியோரைப் பற்றிய உண்மைகளை அறிந்து, ஆதாரங்களைக் கைப்பற்றி, அதை வைத்து அவர்களை அம்பலப்படுத்தியும், மக்களின் மனதில் கொழுந்து விட்டெரியும் புரட்சித்தீயில் சீமான்கள் சபையைச் சார்ந்த அனைவரும் கருகிப்போக உள்ள அபாயத்தைப் பற்றியும் எடுத்துக்கூறி சீமான்கள் சபையினரின் மனதை மாற்றி மன்னர் ஆட்சி செய்யும் மணிபுரியை மக்கள் ஆட்சி செய்யும் மணிபுரியாக மாற்றுவதற்கு சம்மதிக்கவும் வைக்கிறான்.*

*இதனை அறியாத மக்கள் மன்றத்தலைவன் பொன்னழகனும் புரட்சிக் கவிஞரும் (சகஸ்ரநாமம்) அல்லியின் கையில் துப்பாக்கியைக் கொடுத்து மன்னன் மணிமாறனைக் கொலை செய்தால்தான் கொடிக்கால் நகர மக்களைக் காப்பாற்ற முடியும் என்று சொல்லி அனுப்புகின்றனர். இரவில் அல்லி அரண்மனைக்கு அரசனைக் கொலை செய்ய வருகிறாள். அங்கு பூங்கொடி அல்லியைத் தடுக்கிறாள். 'சீ தூரப் போ துரோகியே' என பூங்கொடியைத் தாக்கி, மயக்கமடையச் செய்து விட்டு அல்லி மணிமாறனின் அறையில் நுழைகிறாள்.*

*மன்னன் மணிமாறன்தான் தன்னுடைய மனதைக் கவர்ந்த புரட்சிக்காரன் புதுமைப்பித்தன் என்கிற உண்மையை அறிந்து அதிர்ச்சியடைகிறாள். தமது கொள்கைக்கும் நாட்டுக்கும் தானும் துரோகம் செய்து விட்டதாக மனம் வருந்தித் துப்பாக்கியால் தன்னையே சுட்டுக்கொண்டு இறந்து போகிறாள். அங்கு வரும் பொன்னழகனும் பூங்கொடியும் அல்லியின் தியாகத்தைக் கண்டு கண்ணீர் சிந்துகின்றனர்.*

*இறுதியில் மதகுரு, திவான், பல தேவன் ஆகியோர் கைது செய்யப்படுகின்றனர். மணிபுரியில் மக்களாட்சி மலர்கிறது. மணிமாறன் சமாதானப் புறா பறக்கும் கொடியை ஏற்றிவைத்துவிட்டு, எளிய மனிதனாக பூங்கொடியுடன் நடந்து போவதுடன் படம் நிறைவடைகிறது.*

**...காட்சி விரியும்**

## வாக்கைத் திருடும் எஸ்.ஐ.ஆர்.!- கருத்தரங்கம்




சிறப்புத் தீவிர திருத்தம் என்ற பெயரில், பீகாரில் 65 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்ட பின்பு, சட்டமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு, தேசிய ஜனநாயகக் கூட்டணி, ஆட்சியைத் தக்கவைத்துள்ளது. பீகாரின் அதே ஃபார்முலாவை தமிழ் நாட்டிலும் பின்பற்றும் வகையில், சிறப்புத் தீவிர திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளது தேர்தல் ஆணையம். பீகாரில் பெண்கள், சிறுபான்மையினர், புலம்பெயர் தொழிலாளர்கள் பெரும் பாலும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதைப் போல, தமிழ்நாட்டில் எவரும் நீக்கப்பட்டு விடக்கூடாது என்ற நோக்கத்துடன், தி.மு.கழக பாக முகவர்கள் மிகத் தீவிரமாக எஸ்.ஐ.ஆர். பணிகளைக் கண்காணித்து வருகின்றனர். பொதுமக்களுக்கும் அதுதொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

தி.மு.க. தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் நேரடியாக நிர்வாகிகளிடம் பேசி, களநிலவரங்களை உடனுக்குடன் அறிந்து வருகிறார். ஒட்டுமொத்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளும் இவ்விவகாரத்தில் மிக விழிப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது ஒரு பக்கம் நடந்துகொண்டிருந்தாலும், சிறப்புத் தீவிர திருத்தத்திற்கான நோக்கம் என்ன? பின்னணி என்ன என்பதையும் நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமான ஒன்று.

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட முற்போக்காளர்கள், பத்திரிகையாளர்கள், செயற்பாட்டாளர்கள் பலரும் எஸ்.ஐ.ஆரின் நோக்கம் குறித்து கேள்வி எழுப்பி வருகின்றனர். அந்த வகையில் VOICE OF TN அமைப்பு இதுதொடர்பான கருத்தரங்கம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. சென்னை அசோக் நகரில் உள்ள அம்பேத்கர் திடலில் 24.11.2025 அன்று நடைபெறும் இக்கருத்தரங்கில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., இடதுசாரி செயற்பாட்டாளர் மருதையன் ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

எஸ்.ஐ.ஆர். குறித்து தெளிவு பெற, மோசடிகளை முறியடிக்க இந்தக் கருத்தரங்கம் அனைவரையும் அழைக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### அரசுப் பணி ஓய்வுக்குப் பின் தலைவரிடம் வாழ்த்து!



எஸ்.அப்பாசாமி

2012-ஆம் ஆண்டு, ஈரோடு, தந்தை பெரியார் அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவ உதவியாளராகப் பணியாற்றி அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்றதையொட்டி, தலைவர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றேன். கழக நண்பர்கள் என்.நாட்ராயன், முத்துச்செல்வன், தங்கராஜ் ஆகியோருடன் சென்று, தலைவர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வந்தது மறக்க முடியாத நினைவு.

**– எஸ்.அப்பாசாமி,**
**முன்னாள் துணைச் செயலாளர்**
**18-வது வார்டு, ஈரோடு மாநகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 1962 -ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்!

1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தல், தமிழ்நாட்டில் பிப்ரவரி 17-ஆம் தேதி தொடங்கி, 24-ஆம் தேதி முடிவடைந்தது. 25-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டன. 142 இடங்களில் போட்டியிட்ட கழகம், 50 இடங்களில் வென்றது. 7 நாடாளுமன்றத் தொகுதிகளையும் கழகம் கைப்பற்றியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131